<u>அசல் வழக்கு எண். 35/2021</u>

13.03.2025

பெயர் – ஆனந்தி (Pw1)

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(1) என்ன பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வீட்டுச் சந்தில் கட்டிடம் கட்டி விட்டார்கள். அதை காட்டி என்னை அந்த தடத்தில் நடக்க விடாமல் தடுக்கிறார்கள் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப் படிக்க தெரியும். பிரதிவாதியின் கிரையப் பத்திரத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். அவரது பத்திரத்தில் உள்ள அளவுகளை விட அதிகமாக வைத்து தற்போது கட்டிடம் கட்டி உள்ளார். அதன் அளவுகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதிகமாக அளவு வைத்து கட்டி உள்ளார்கள். ஆனால் எவ்வளவு அடி என்பது என் கணவருக்கு தான் தெரியும். ஜெயலட்சுமி வீட்டிற்கு மேற்கு புறமாக தான் என் வீடு உள்ளது என்றால் சரிதான்.

(2) எங்கள் இருவர் வீட்டிற்கு இடையில் தென்வடல் சந்து உள்ளதா என்றால் உள்ளது. அது பொது சந்தா என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட சந்து ஆகும். ஆனால் அவர்கள் தற்போது அதில் கட்டிடம் கட்டி உள்ளார்கள். நாங்கள் எங்கள் இடத்தை எந்த வருடம் கிரையம் பெற்றோம் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் கிரையம் பெற்ற பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி எப்போது கிரையம் பெற்றார் என்றால் அது ஞாபகம் இல்லை. எவ்வாறு நான் எனக்கு பின்பு தான் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்று சொல்கிறேன் என்றால் பத்திரத்தை படித்துப் பார்த்த போது தெரிந்தது.

**பிரதிவாதி தரப்பில் தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.03.13 10:50:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்